Berufsverband
Heilpädagogische
Früherziehung

## பெற்றோர்களாகிய நீங்கள்.. உங்கள் குழந்தையின் வளர்ச்சி குறித்து அமைதி குலைந்திருக்கிறீர்களா?

### உங்கள் அவதானிப்பில் உங்கள் குழந்தை

- சிசுவில் அடிக்கடி அழுதல் மற்றும் அமைதியடையச் சிரமப்படுதல்
- சிசுவில் அசைவுகள் குறைவாக இருத்தல்
- மிகச் சில பொருட்களையே கையில் எடுத்தல்
- தனிமையில் விளையாடுதல் குறைவாக இருத்தல்
- அமைதியின்றி இருத்தல், விடயங்களில் நீண்ட நேரம் மனதை ஒருமைப் படுத்தச் சிரமப்படுதல்
- மனம் திறந்து பேசாதிருத்தல், பயப்படுதல் அல்லது ஆபத்தை அறியாதிருத்தல்
- புதியவற்றைக் கற்பதற்கு நீண்ட காலம் எடுத்தல்
- பிற குழந்தைகளுடன் பழகுவதில் ஆர்வமற்றிருத்தல் (3 வயதிற்கு மேல்)
- செயல்கள், உச்சரிப்பு அல்லது சொல்லை அதே மாதிரிச் செய்ய அல்லது சொல்ல முடியாதிருத்தல்

## உங்கள் வளர்ப்புக் குறித்துக் கவலையுடன் இருக்கிறீர்களா?

### உங்கள் அனுபவத்தில், உங்கள் குழந்தை

- மிக்க வேற்றுமையுடனிருத்தல், அல்லது வேற்றுமையே இல்லாதிருத்தல்
- அடிக்கடி மற்றக் குழந்தைகளுடன் சண்டையில் ஈடுபடுதல்
- "இல்லை" என்பதை ஒத்துக் கொள்ளாமலிருத்தல், சொல்பவற்றைக் கேட்காதிருத்தல்
- பேச்சுவார்த்தையை மீறுதல்
- பொருட்களை அதிகமாகச் சேதப் படுத்துதல்
- மிகுந்த மூர்கத்தனத்தை வெளிப்படுத்துதல்
- அமைதியாக உட்கார முடியாதிருத்தல்

## உங்கள் குழந்தையின் பேச்சு, பரிமாற்றம் பற்றிக் கவலைப் படுகிறீர்களா?

### உங்கள் அவதானிப்பில் உங்கள் குழந்தை

- சிசுவாக மிகக் குறைவான ஒலிகளை, உச்சரிப்புகளை உருவாக்குதல்
- தன்னுடைய தேவையைத் தெரியப்படுத்துவதற்குச் சிரமப்படுதல், குறைவாகப் பேசுதல்
- திக்கிப் பேசுதல்
- ஒரு சொல்லில் நிறைய உச்சரிப்புகள் அல்லது எழுத்துகளை விட்டுவிடுதல்
- இலகுவான வசனங்களை அமைக்கச் சிரமப்படுதல்
- சற்றும் புரிந்து கொள்ளாதிருத்தல், தன்னை மற்றவர்கள் விலக்கி வைப்பதாக உணர்தல்
- உங்களை அடிக்கடி புரிந்து கொள்ளாதிருத்தல்

உங்கள் குழந்தை ஏன் இப்படி நடந்துகொள்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அதன் நேர்மறையான வளர்ச்சிக்கு உதவ விரும்புகிறீர்களா? நீங்கள் தனிப்பட்ட, துறை சார்ந்த ஆலோசனையை விரும்பும் பட்சத்தில், முன்கூட்டிய கல்விப் பரிகாரம் (Heilpädagogische Früherziehung) உங்களுக்கு ஆலோசனை மற்றும் செயல் மூலம் உதவ முடியும். தகவல்களுக்கு உங்கள் மாநிலத்திலுள்ள முன்கூட்டிய கல்விப் பரிகார மையங்களை அணுகுங்கள். முகவரிகளை இங்கு பெற்றுக் கொள்ளலாம்.